இந்திய உச்சநீதிமன்றம்

2019 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 23 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திருமதி. பானுமதி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திருமதி. எ.எஸ்.போபண்ணா

ஷிவ் பிரகாஷ் மிஸ்ரா

எதிர்

உத்தரப்பிரதேச மாநிலம் மற்றும் ஒருவர்

குற்றவியல் நடைமுறை சட்டம், 1973- பிரிவு 319 - அதன் கீழான அதிகாரங்கள் - செயல்படுத்துதல் - எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 - எஸ்சிஎஸ் என்பவர், எஸ்எஎஸ், டி.எஸ், எல்.கே.எஸ், மற்றும் ஆர்எஸ் என்ற மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் சேர்ந்து தங்களை ஒரு சட்டவிரோத அமைப்பாக அமைத்துக் கொண்டனர் மேலும் முறையீட்டாளர்-மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு வந்து , பழைய விரோதத்திற்காக அவரைத் திட்டினார் என்று புகார் அளிக்கப்பட்டது - மேல்முறையீட்டாளரின் மூத்த சகோதரர்கள், எஸ்.எல்.எம் மற்றும் எஸ்.கே.எம் எதிரிகள் ஏசுவதை தடுக்க முயற்சி செய்தனர்- இதில் குற்றஞ்சாட்டப்பட்ட எஸ்.ஏ.எஸ் எஸ்.கே.எம்-ஐ கொல்லும் நோக்கில் கைத்துப்பாக்கியால் சுட்டார் - இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் எஸ்.எல்.எம் தலையில் வீட்டில் செய்த கைத்துப்பாக்கியின்(கட்டா) அடிப்பக்கத்தால் வலுவாகத் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்படுகிறது - எஸ்.எல்.எம். காயங்களுக்கு பலியானார்- எஸ்.ஏ.எஸ்,

டி.எஸ் மற்றும் எல்.கே.எஸ் ஆகிய மூன்று எதிரிகளுக்கு எதிராக மட்டுமே குற்ற அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது - மேலும் விசாரணையில், எதிரி ஆர்.எஸ்.க்கு எதிராக கூடுதல் குற்ற அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது - மேல்முறையீட்டாளர் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை குற்றஞ்சாட்டப்பட்டவராக சேர்க்க கு.ந.ச. பிரிவு 319 இன் கீழ் மனு தாக்கல் செய்தார் - தள்ளுபடி செய்யப்பட்டது - உயர்நீதிமன்றத்தின் முன் சீராய்வு மனு - தள்ளுபடி செய்யப்பட்டது - எந்த நபரையும் அவர் ஏதேனும் குற்றம் செய்திருக்கிறார் என்று சான்றுகளிலிருந்து தோன்றினால் அத்தகைய நபரை எதிரியுடன் சேர்ந்து விசாரிப்பதற்காக, அத்தகைய நபரை எதிரியாக வழக்கை எதிர்கொள்ள விசாரணையின் எந்தக் கட்டத்திலும் அழைப்பாணை அனுப்ப கு.ந.ச. பிரிவு 319 இன் கீழான அதிகாரங்களை விசாரணை நீதிமன்றம் செயல்படுத்தலாம் - கு.ந.ச.பிரிவு 319 இன் கீழ் ஒரு நபரை எதிரியாக அழைப்பதற்கு பயன்படுத்தப்படும் சான்றின் தரம் அந்த நபருக்கு எதிராக குற்றச்சாட்டை வனைவதற்கு பயன்படுத்தப்படும் சான்றின் தரத்தை விட அதிகமானது - கு.ந.ச.பிரிவு 319 இன் கீழான அதிகாரங்கள் அரிதாக பயன்படுத்தப்பட வேண்டியவை - மு.த.அ.வில் இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலும், புலன்விசாரணையின் போது, இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர் சம்பவம் நடந்த இடத்தில் இல்லை என்பது கண்டறியப்பட்டது, புலன்விசாரணை அதிகாரியின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், அவர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை - மேல்முறையீட்டாளர் - புகார்தாரர் அங்கே அப்போது எந்த எதிர்ப்பு மனுவையும் தாக்கல் செய்யவில்லை - மேலும், மேல்முறையீட்டாளர் முதல் விசாரணையில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் இருப்பைப் பற்றிக் கூறியிருந்தாலும் குறுக்கு விசாரணையில் அந்த நேரத்தில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் பணியிலிருந்ததாகக் கூறினார் - மேல்முறையீட்டாளர் முரணான அறிக்கைகளை வெளியிட்டார் - சம்பவத்தில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் உடந்தையாக இருந்ததை பதிவில் உள்ள சான்றுகள் முகாந்திரமாக காண்பிக்கவில்லை -

இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை குற்றம் சாட்டப்பட்டவராக அழைக்க கீழமை நீதிமன்றங்கள் மறுத்தது நியாயமானது - தலையிடுவதற்கு கணிசமான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை - த.ச.1860 - பிரிவுகள் 147, 148, 149, 302, 307, 323 மற்றும் 504 .

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்த இந்நீதிமன்றத்தின்,

தீர்முடிவு: 1.1 எந்த நபரையும் அவர் ஏதேனும் குற்றம் செய்திருக்கிறார் என்று சான்றுகளிலிருந்து தோன்றினால் அத்தகைய நபரை எதிரியுடன் சேர்ந்து விசாரிப்பதற்காக, எந்த நபரையும் எதிரியாக வழக்கை எதிர்கொள்ள விசாரணையின் எந்தக் கட்டத்திலும் அழைப்பாணை அனுப்ப கு.ந.ச. பிரிவு 319 இன் கீழான அதிகாரங்களை விசாரணை நீதிமன்றம் செயல்படுத்தலாம். கு.ந.ச.பிரிவு 319 இன் கீழ் ஒரு நபரை எதிரியாக அழைப்பதற்கு பயன்படுத்தப்படும் சான்றின் தரம் அந்த நபருக்கு எதிராக குற்றச்சாட்டை வனைவதற்கு பயன்படுத்தப்படும் சான்றின் தரத்தை விட அதிகமானது. கு.ந.ச. பிரிவு 319 கீழ் உள்ள அதிகாரம் அரிதாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

1.2 சாட்சிகளின் முரண்பாடான வாக்குமூலங்களையும் மற்ற சூழல்களையும் கருத்தில் கொண்டு, இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை எதிரியாக அழைப்பாணையிட முடியாது என விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் சரியாக தீர்முடிவு செய்துள்ளது. 06.09.2013 அன்று 18.15 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் சந்தேகத்திற்கு இடமின்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் அவரது வெளிப்படையான செயலே அதற்கு காரணமாக இருக்கிறது. புலன்விசாரணையின் போது புலனாய்வு அதிகாரி சம்பவ நிகழ்ந்த நேரத்தில் நடந்த இடத்தில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் இல்லை என்ற சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்தார். புலனாய்வு அதிகாரி இரண்டாவது

எதிர்மேல்முறையீட்டாளர் பணிபுரிந்த அதே அலுவலகத்தில் பணிபுரியும் எஸ்.கே.ஜி மற்றும் எஸ்.ஜி. ஆகியோர்களின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தார், அவர்கள் எதிர்மேல்முறையீட்டாளர் 2 சம்பவம் நடந்த நேரத்தில் அலுவலகத்தில் இருந்தார் என்று கூறினார். அதன்படி 19.09.2014 அன்று தாக்கல் செய்த முதல் குற்ற அறிக்கையில் எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 இன் பெயரை சேர்க்காமல் விட்டுவிட்டார். இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் மு.த.அ வில் சேர்க்கபட்டாலும், விசாரணையின் போது சம்பவ இடத்தில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் இல்லை என்பது தெரியவந்தது, அதன் அடிப்படையில் புலன்விசாரணை அதிகாரி அவர்மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை. அங்கே அப்பொழுதே மேல்முறையீட்டாளர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிரியாக அழைப்பாணை அனுப்ப கீழமை நீதிமன்றங்கள் சரியாக மறுத்துள்ளன. 22.10.2016 அன்று நடந்த முதல் விசாரணையில், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் இருந்தார் என அ.த.சா.1 கூறினாலும், இறந்த எஸ்.எல்.எம்.ஜ கைத்துப்பாக்கியின் அடிபக்கத்தால் அடித்ததார் என்ற வழக்கிற்கான முக்கிய செயலை அவர் மீது சுமத்தினாலும், 28.02.2017 அன்று நடந்த குறுக்கு விசாரணையில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் அந்த நேரத்தில் பணியில் இருந்ததாக கூறினார்.

1.3 சம்பவத்தில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் உடந்தையாக இருந்ததை பதிவில் உள்ள சான்றுகள் முகாந்திரமாக காண்பிக்கவில்லை, மேலும் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை குற்றம் சாட்டப்பட்டவராக அழைக்க உயர்நீதிமன்றம் மறுத்தது நியாயமானது. வழக்கில் எதிரியாக இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அழைப்பாணையிட பதிவில் உள்ள சான்றுகள் போதுமானதாக இல்லை என உயர்நீதிமன்றமும் விசாரணை நீதிமன்றமும் ஒருசேர முடிவுரைத்துள்ளன. தலையிடுவதற்கு கணிசமான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை. விசாரணை நீதிமன்றம் எஸ்.டி. எண்

26/2015 என்ற வழக்கின் விசாரணையை சட்டப்படி தொடரலாம். இந்த மேல்முறையீட்டில் இந்நீதிமன்றத்தின் காண்முடிவுகளும், சீராய்வில் உயர்நீதிமன்றத்தின் காண்முடிவுகளும் முறையே மேல்முறையீட்டின் மற்றும் சீராய்வின் நோக்கங்களை பரிசீலிப்பதற்காக மட்டுமே கருதப்பட வேண்டும், அதையே முதன்மை வழக்கின் தகுதிப்பாடுகளாக கருத்தை வெளிப்படுத்துவதாக பொருள்கொள்ளக்கூடாது.

ஹர்தீப் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் மற்றும் பலர்

(2014) 3 எஸ்.சி.சி 92 : [2014] 2 எஸ்.சி.ஆர் 1 - பின்பற்றப்பட்டது

பிரிஜேந்திர சிங் மற்றும் பலர் எதிர் ராஜஸ்தான் மாநிலம்

(2017) 7 எஸ்.சி.சி 706 : [2017] 3 எஸ்.சி.ஆர் 374; கைலாஷ் எதிர் ராஜஸ்தான் மாநிலம் மற்றும் ஒருவர்

(2008) 14 எஸ்.சி.சி 51 :[2008] 3 எஸ்.சி.ஆர் 702 - சார்வுறப்பட்டது

பார்வையிடப்பட்ட தீர்ப்புகள்

[2017] 3 எஸ்.சி.ஆர் 374	சார்வுறப்பட்டது	பத்தி 4
[2014] 2 எஸ்.சி.ஆர் 1	பின்பற்றப்பட்டது	பத்தி 6
[2008] 3 எஸ்.சி.ஆர் 702	சார்வுறப்பட்டது	பத்தி 9

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 1105/2019

அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் 482 கீழான விண்ணப்ப எண் 36010/2018 இல் பிறப்பிக்கப்பட்ட 04.12.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர்கள் அரவிந்த் குமார் சுக்லா, திருமதி ரீது சர்மா, நிஹால் அகமது, குணால் யாதவ், திருமதி நீனா சுக்லா

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர்கள் அர்தேந்துமௌலி குமார் பிரசாத், நிகிலேஷ் ஆர்., ஆகாஷ் சவுத்ரி, மனீஷ் ஷர்மா

தீர்ப்புரை

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திருமதி. ஆர். பானுமதி அவர்களால் வழங்கப்பட்டது.

1.அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடானது அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் விண்ணப்ப எண் 36010/2018 இல் பிறப்பிக்கப்பட்ட 04.12.2018 தேதியிடப்பட்ட உத்தரவிலிருந்து எழுகிறது, அதில் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை உயர் நீதிமன்றம் உறுதி செய்து, இதனால்

இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர் சுபாஷ் சந்திர சுக்லாக்கு கு.ந.ச.பிரிவு 319-ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் என அழைப்பாணை அனுப்ப மறுத்துவிட்டது.

3. இந்த மேல்முறையீடை தாக்கல் செய்வதற்கான சுருக்கமான பொருண்மைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

புகார்தாரர் - சிவ் பிரகாஷ் மிஸ்ரா (அ.த.சா.-1) 06.09.2013 அன்று காலை 9.00 மணிக்கு அளித்த புகாரின்படி, சஷேந்திர சுக்லா, தேவேந்தர் சுக்லா, லக்ஷ்மி காந்த் சுக்லா மற்றும் ராகுல் சுக்லா ஆகிய மற்ற குற்றவாளிகளுடன் சேர்ந்து எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2- சுபாஷ் சந்திர சுக்லாவும் தங்களை ஒரு சட்டவிரோத குழுவாக அமைத்து, புகார்தாரரின் வீட்டிற்கு வந்து, பழைய விரோதத்தின் காரணமாக அவரை திட்டினார்கள் ஆரம்பித்தனர். எதிர்வீட்டில் வசித்த புகார்தாரர்களின் மூத்த சகோதரர்களான சங்கம் லால் மிஸ்ரா மற்றும் சுனில் குமார் மிஸ்ரா வெளியே வந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் திட்டுவதைத் தடுக்க முயற்சி செய்தார்கள். இதில், சஷேந்திர சுக்லா சுனில் குமார் மிஸ்ராவை கொள்ளும் நோக்குடன் தன்னுடைய கைத்துப்பாக்கியால் சுட்டார். மற்ற குற்றவாளிகள் சங்கம் லால் மிஸ்ராவை லத்தி மற்றும் கழியால் அடித்தனர் அதே சமயத்தில், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் இறந்த சங்கம் லால் மிஸ்ராவின் தலையில் வீட்டில் செய்த கைத்துப்பாக்கியின்(கட்டா) அடிப்பக்கத்தால் வலுவாகத் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இறந்த சங்கம் லால் மிஸ்ரா மற்றும் சுனில் குமார் மிஸ்ரா ஆகியோர் காயமடைந்து, கீழே விழுந்தனர். சிகிச்சையின் போது, சங்கம் லால் மிஸ்ரா காயங்களால் இறந்தார். இந்த சம்பவம் அ.த.சா.2-ஆனந்த் குமார் மிஸ்ரா, தேவ் நரைன் மிஸ்ரா மற்றும் புகார்தாரரால் பார்க்கப்பட்டது. புகார்தாரர்(அ.த.சா.-1) ஷிவ் குமார் மிஸ்ரா மேஜா காவல் நிலையத்தில் அதே நாளில் அதாவது 06.09.2013 அன்று 18.15 மணிக்கு புகாரளித்தார். இந்த புகாரின் அடிப்படையில், சுபாஷ் சந்திர சுக்லா, சஷேந்திர சுக்லா, ராகுல் சுக்லா, லட்சுமி காந்த்

சுக்லா மற்றும் தேவேந்தர் சுக்லா ஆகிய ஐந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதும் இ.த.ச. பிரிவுகள் 147, 148, 149, 302, 307, 323 மற்றும் 504 இன் கீழ் மு.த.அ எண் 275/2013 குற்ற வழக்கு எண் 328A/2013 ஆக பதிவு செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் புலன்விசாரணை காவலரால் மேற்கொள்ளப்பட்டது. அரசின் உத்தரவின் பேரில், வழக்கின் புலன்விசாரணை குற்றப்பிரிவு குற்றபுலனாய்வுத் துறைக்கு (சிபிசிஐடி) மாற்றப்பட்டது. விசாரணையை மேற்கொண்ட குற்றப்பிரிவு குற்றபுலனாய்வுத் துறை, இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தில் பல நபர்களை விசாரித்து, சஷேந்திர சுக்லா, தேவேந்தர் சுக்லா மற்றும் லக்ஷ்மி காந்த் சுக்லா ஆகிய மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் மீது மட்டும் 19.09.2014 அன்று குற்ற அறிக்கை எண் 13/2014 தாக்கல் செய்தது. மேலும் விசாரணையில், குற்றஞ்சாட்டப்பட்ட ராகுல் சுக்லா மீது கூடுதல் குற்ற அறிக்கை எண் 13A/2014 தாக்கல் செய்யப்பட்டது.

4. இந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு, அமர்வு வழக்கு எண் 1329/2014 இல் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. 2016 ஆகஸ்ட் வாக்கில் விசாரணை தொடங்கப்பட்டது. ஷிவ் பிரகாஷ் மிஸ்ரா (அ.த.சா.1) ஆனந்த் குமார் மிஸ்ரா (அ.த.சா. 2), சுனில் குமார் மிஸ்ரா (அ.த.சா.3) ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 03.10.2017 அன்று அ.த.சா.1 ஷிவ் பிரகாஷ் மிஸ்ரா கு.ந.ச. பிரிவு 319 இன் கீழ் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் சுபாஷ் சந்திர சுக்லாவை குற்றஞ்சாட்டப்பட்டவராகச் சேர்க்கச் சொல்லி ஒரு மனுத் தாக்கல் செய்தார். இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் பங்கை பொறுத்தவரையில் ஷிவ் பிரகாஷ் மிஸ்ரா (அ.த.சா.1)வாக்குமூலமும் ஆனந்த் குமார் மிஸ்ராவின் வாக்குமூலமும் (அ.த.சா.2) முரண்படுகிறது என்று கருத்துரைத்து, விசாரணை நீதிமன்றம் பிரிவு 319 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை 28.08.2018 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்தது. முன்மொழியப்பட்ட எதிரி சுபாஷ் சந்திர சுக்லா மிர்சாபூர் மாவட்டத்திலுள்ள பணியிடத்தில் இருந்தது சரிபார்க்கப்பட்டது, அது புகார்தாரரின் வாக்குமூலத்துடன் ஒப்புறுதிப்படுத்தப்பட்டது,

சம்பவ இடத்தில் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் இருந்தது பெரிதும் சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்று விசாரணை நீதிமன்றம் முடிவுரைத்தது. விசாரணை நீதிமன்றம் பிரிஜேந்திர சிங் மற்றும் பலர் எதிரி ராஜஸ்தான் மாநிலம் (2017) 7 எஸ்சிசி 706 என்ற வழக்கை சார்வுற்றது. எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 இற்கு எதிரியாக அழைப்பாணை அனுப்ப பதிவில் எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என புகார்தாரரால் உயர்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் குறையுற்ற புகார்தாரர் நமக்கு முன் மேல்முறையீடு செய்திருக்கிறார்.

5. மேல்முறையீட்டாளர் - புகார்தாரரின் கற்றறிந்த வழக்கறிஞர், புகார்தாரர் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து நபர்களின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் என்றும், இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் வழக்கு குற்ற எண் 328 ஏ / 2013 இல் மு.த.அ வில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சமர்ப்பித்தார். இறந்தவர் மீது எதிர்மேல்முறையீட்டாளர் 2 நடத்திய தாக்குதல் சம்பந்தமாக அரச தரப்பு சாட்சிகளின் நேரடிப் கூற்று சாதகமாக இருந்த போதும், மிர்சாபூர் சேது நிகம் அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரியும் எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது பெயரை புலன்விசாரணை அதிகாரி குற்றப்பத்திரிகையில் இருந்து நீக்கியுள்ளார் என்று முன்வைத்தார். இந்த செயலை 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தான் செய்தார் என்று குறிப்பாக சான்றுரை செய்த அ.த.சா.1-3 இன் வாக்குமூலங்களை உயர்நீதிமன்றம் பரிசீலனை செய்யாமல் பிழைத்துள்ளது என்று பணிந்துரைத்தார். இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர் வேலை செய்த இடம் சுமார் 30 கி.மீ. தொலைவில் மட்டுமே உள்ளது என்பதை பரிசீலிக்கத் தவறியுள்ளது என்றும் அவ்வாறு இருக்கையில் உயர்நீதிமன்றம் பிஜேந்திரா சிங் வழக்கை சார்வுற்று பிழைத்துள்ளது என்றும் வாதிடப்பட்டது.

6. முறையான விசாரணைக்குப் பிறகு, குற்றப்பிரிவு குற்றபுலனாய்வுத் துறை குற்றஞ்சாட்டப்பட்ட சுக்லா, தேவேந்தர் சுக்லா மற்றும் லக்ஷ்மி காந்த் சுக்லா ஆகிய மூன்று நபர்களுக்கு எதிராக 19.09.2014 அன்று குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்தது, மேலும் 15.10.2014 அன்று ராகுல் சுக்லா மீது கூடுதல் குற்ற அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்று முதல் எதிர்மேல்முறையீட்டாளர் - உத்தரபிரதேச அரசு சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் பணிந்துரைத்தார். புலன்விசாரணையின் போது எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 இன் அலுவலகத்தில் பணிபுரிந்த பல சாட்சிகளை விசாரித்தப்பின், எதிர்மேல்முறையீட்டாளர் எண்.2 இக்கு இந்த சம்பவத்தில் தொடர்பு இல்லை என்று புலன்விசாரணை அதிகாரி கண்டறிந்தார், எனவே மற்ற எதிரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது மற்றும் இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிரான வழக்கு கைவிடப்பட்டது என்று கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். ஹர்தீப் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் மற்றும் பலர் (2014) 3 எஸ்சிசி 92 மற்றும் பிரிஜேந்திர சிங் எதிர் ராஜஸ்தான் மாநிலம் (2017) 7 எஸ்சிசி 706 ஆகிய வழக்குகளை சார்வுற்று, கு.ந.ச. பிரிவு 319 இன் கீழான அதிகாரங்கள் வலுவானக் காரணங்கள் இருந்தால் மட்டுமே அரிதாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டது. அழைப்பாணையிடப்பட வேண்டிய நபரை சம்பந்தப்படுத்தி பதிவில் சான்றுகள் இருக்கிறது என்ற அடிப்படையில் மட்டும் கு.ந.ச.வின் பிரிவு 319 இன் கீழ் உத்தரவு பிறப்பிக்க இயலாது என்று மேலும் பணிந்துரைக்கப்பட்டது.

7. நாங்கள் சமர்ப்பிப்புகளையும், குறையுற்ற உத்தரவையும், பதிவில் உள்ள ஆவணங்களையும் கவனமாக பரிசீலித்தோம். இந்த வாதங்களின் தகுதிகளை பரிசீலிக்கும் முன், கீழே கண்டுள்ளவாறு கு.ந.ச. பிரிவு 319 ஐ சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது:

319. குற்றம் புரிந்ததாகத் தோன்றும் ஏனைய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம்:

"(1) குற்றமொன்றுக்கான பரிசீலனை அல்லது விசாரணை நடைபெறும்போது குற்றஞ்சாட்டப்படாத வேறெவரேனும் எந்தக் குற்றத்திற்காக எதிரியுடன் சேர்ந்திணையாக விசாரணை செய்யப்பட்டிருக்க முடியுமோ அந்தக் குற்றம் எதையேனும் செய்திருக்கிறார், என்பதாக சாட்சியத்திலிருந்து தோன்றுமிடத்து நீதிமன்றம் அத்தகையவர் செய்திருப்பதாகத் தோன்றுகிற குற்றத்திற்காக, அவர் மீது நடவடிக்கைத் தொடரலாம்.

.....

(4)நீதிமன்றம் (1)ஆவது உட்பிரிவின் படி எவர் மீதேனும் நடவடிக்கை எடுக்குமிடத்து, அதுபோது

(எ) அத்தகையவரைப் பொறுத்து நடவடிக்கைகள் புதியதாகத் துவங்கப்படுத்தலும், சாட்சிகள் மீண்டும் கேட்கப்படுதலும் வேண்டும்;

(பி) எந்தக் குற்றத்தின் பேரில் பரிசீலனை அல்லது விசாரணை துவக்கப்பட்டதோ, அந்தக் குற்றத்தை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது, அத்தகையவர் ஓர் எதிரியாக இருந்தது போன்றே, அந்த வழக்கானது (எ) கூறின் வகைமுறைகளுக்குட்பட்டு மேல் நடத்தப்படலாம். "

கு.ந.ச.பிரிவு 319 ஐ வாசிக்கும்போது, எந்த நபரையும் அவர் ஏதேனும் குற்றம் செய்திருக்கிறார் என்று சான்றுகளிலிருந்து தோன்றினால் அத்தகைய நபரை எதிரியுடன் சேர்ந்து விசாரிப்பதற்காக, எந்த நபரையும் எதிரியாக வழக்கை எதிர்கொள்ள விசாரணையின் எந்தக் கட்டத்திலும் அழைப்பாணை அனுப்ப கு.ந.ச. பிரிவு 319 இன் கீழான அதிகாரங்களை விசாரணை நீதிமன்றம் செயல்படுத்தலாம்.

9. கு.ந.ச.பிரிவு 319 இன் கீழ் ஒரு நபரை எதிரியாக அழைப்பதற்கு பயன்படுத்தப்படும் சான்றின் தரம் அந்த நபருக்கு எதிராக குற்றச்சாட்டை வனைவதற்கு பயன்படுத்தப்படும் சான்றின் தரத்தை விட அதிகமானது. கு.ந.ச. பிரிவு 319 கீழ் உள்ள அதிகாரம் அரிதாகப் பயன்படுத்தப்பட வேண்டும். கைலாஷ் எதிர் ராஜஸ்தான் மாநிலம் மற்றும் ஒருவர் (2008) 14 எஸ்.சி.சி 51 என்ற வழக்கில் முடிவுரைத்தவாறு, கு.ந.ச. பிரிவு 319 கீழ் கூடுதல் எதிரிக்கு அழைப்பாணையிடும் அதிகாரம் அரிதாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த பிரிவில் உள்ள முக்கியமான வார்தைகளாவன "சான்றுகளிலிருந்து தெரிகிறது"..."எந்த நபரும்"..."ஏதேனும் குற்றம் செய்திருக்கிறார்" சில சாட்சிகள் அத்தகைய நபரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர் என்பதாலோ அல்லது அந்த நபருக்கு எதிராக சில ஆதாரங்கள் உள்ளன என்பதாலோ மட்டும் கு.ந.ச.பிரிவு 319 இன் கீழான அதிகாரம் நீதிமன்றத்தால் பயன்படுத்தப்படும் என்பதல்ல.

10. ஹர்தீப் சிங் வழக்கில் பத்தி (105)இல் அரசமர்வு, கு.ந.ச.பிரிவு 319 இன் கீழான அதிகாரம் விருப்புரிமை சார்ந்தது மேலும் அது அரிதாக பயன்படுத்தப்பட வேண்டியது என்று கீழ்கண்டவாறு முடிவுரைத்ததைப் போல:

> "105. கு.ந.ச.பிரிவு 319 இன் கீழான அதிகாரம் விருப்புரிமை சார்ந்தது மேலும் அது தனிச்சிறப்புடையது. அது அரிதாகவும் வழக்கின் சந்தர்ப்பங்களில் தேவைப்படும்போதும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறு எந்த நபரும் இந்தக் குற்றத்தை புரிந்திருக்கலாம் என்று நீதித்துறை நடுவர் அல்லது அமர்வு நீதிபதி கருதினால் மட்டும் அதை பயன்படுத்தக்கூடாது. நீதிமன்றங்களுக்கு முன் வைக்கப்படும் ஆதாரங்களிலிருந்து ஒரு நபருக்கு எதிராக வலுவான மற்றும் உறுதியான சான்றுகள் ஏற்பட்டால் மட்டுமே அத்தகைய அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும், சாதாரணமாகவும், அலட்சியமான முறையிலும் பயன்படுத்த முடியாது.

106. எனவே, நீதிமன்றத்திற்கு முன்பான சான்றிலிருந்து குறுக்கு விசாரணை என்ற அடிப்படையில் சோதிக்கப்பட வேண்டிய அவசியமில்லாமல் முகாந்திரம் மட்டுமே நிறுவப்பட வேண்டும் என்றாலும், அதற்கு அவர் உடந்தையாக இருந்ததற்கான சாத்தியக்கூறுகளை விட வலுவான ஆதாரங்கள் தேவைப்படுகிறது என்று நாங்கள் முடிவுசெய்கிறோம். செய்யப்படவேண்டிய சோதனையானது குற்றச்சாட்டு வனையப்படும் போது செயல்படுத்தப்படும் முகாந்திர வழக்கைவிட அதிகமானதாகவும் சான்று மறுக்கப்படாவிட்டால் அது தண்டனைக்கு வழிவகுக்கும் என்ற அளவிற்கு திருப்தி குறைவானதாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட திருப்தி இல்லாத பட்சத்தில் கு.ந.ச. பிரிவு 319 இன் கீழான அதிகாரத்தை பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும். "குற்றம் சாட்டப்படாத எந்தவொரு நபரும் எந்தக் குற்றமும் செய்துள்ளார் என்று ஆதாரங்களிலிருந்துத் தெரிந்தால்"என்ற வார்த்தைகளை கு.ந.ச. பிரிவு 319 இல் வழங்கியதன் நோக்கம் "அதற்காக அத்தகைய நபரை குற்றம் சாட்டப்பட்டவருடன் சேர்ந்து விசாரிக்கலாம்" என்ற வார்த்தைகளிலிருந்து தெளிவாகிறது. "அதற்காக அத்தகைய நபர் தண்டிக்கப்படலாம்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. எனவே, எதிரி குற்றவாளி என்ற கருத்தை உருவாக்க கு.ந.ச. பிரிவு 319 இன் கீழ் நீதிமன்றம் செயல்பட எந்த நோக்கெல்லையும் இல்லை."

11. மேற்கண்ட கருத்து பிரிஜேந்திர சிங் வழக்கில் பின்வருமாறு பின்பற்றப்பட்டது:

"13. இந்தக் கேள்விக்கு விளக்கமளிக்க ஹர்தீப் சிங் வழக்கில் (2014) 3 எஸ்.சி.சி 92 தெளிவுரைக்கிற சில கோட்பாடுகள் விளக்கப்படுகின்றன:..... இது கு.ந.ச.பிரிவு 319 கீழ் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட ஒரு விருப்புரிமை அதிகாரமாகவும் இருப்பதால், தனிச்சிறப்புப் பெற்ற அதிகாரமாகவும் இருக்கிறது எனினும் அது அரிதாகவும் வழக்கின் சூழ்நிலைகளில் மிக அவசியமாக தேவைப்படும்போதும் மட்டும் பயன்படுத்தப்பட

வேண்டும். திருப்தியின் அளவானது குற்ற அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டவர்களின் மேல் குற்றச்சாட்டு வனையப்படும் போது தேவைப்படும் அளவைவிட மிகுதியானதாக இருக்கும். நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கும் சான்றுகளிலிருந்து ஒரு நபருக்கு எதிராக வலுவான மற்றும் உறுதியான சான்றுகள் இருக்கும் போது மட்டுமே அத்தகைய அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். அது சாதாரணமாகவோ அலட்சியமாகாவோ பயன்படுத்தப்படக் கூடாது. வழக்கு முகாந்திரத்திற்கு அவர் உடந்தையாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் காட்டிலும் வலுவான சான்றுகள் தேவைப்படுகின்றன."

12. மேற்சொன்ன கோட்பாடுகளின் துணைக்கொண்டு தற்போதைய வழக்கை பரிசீலிக்கையில், சாட்சிகளின் முரண்பாடான வாக்குமூலங்களையும் மற்ற சூழல்களையும் கருத்தில் கொண்டு, இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரை எதிரியாக அழைப்பாணையிட முடியாது என விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் சரியாக தீர்முடிவு செய்துள்ளது. 06.09.2013 அன்று 18.15 மணிக்கு குற்ற வழக்கு எண். 328 எ/2013 இல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சந்தேகத்திற்கு இடமின்றி இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் அவரது வெளிப்படையான செயலே அதற்கு காரணமாக இருக்கிறது. புலன்விசாரணையின் போது புலனாய்வு அதிகாரி ராஜேஷ் குமார், நிஜாமுதீன், நந்த் கிஷோர், திரிபுவன் சிங், பிந்து ராய் மற்றும் நாகேஷ்வர் குமார் ஆகிய சாட்சிகள் மற்றும் மற்ற ஏழு சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்தார் என்பதும், அவர்கள் சம்பவ நிகழ்ந்த நேரத்தில் நடந்த இடத்தில் அவர் இல்லை என்று கூறியுள்ளனர் என்பது பதிவிலிருந்து தெளிவாகிறது. புலனாய்வு அதிகாரி இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரின் பணிபுரிந்த அதே அலுவலகத்தில் பணிபுரியும் ஷிவ் குமார் குப்தா மற்றும் சந்தீப் குப்தா ஆகியோர்களின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தார், அவர்கள்

எதிர்மேல்முறையீட்டாளர் 2 சம்பவம் நடந்த நேரத்தில் அலுவலகத்தில் இருந்தார் என்று கூறினார். சாட்சிகளிடமிருந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர் லக்னோவில் உள்ள பிரிட்ஜ் கார்ப்பரேஷனின் பாலம் கட்டுமான பிரிவில் இளநிலை பொறியாளர் பதவியில் நியமிக்கப்பட்டார், 06.09.2013 அன்று அவர் தனது பணியிடத்தில் தன்னுடைய அலுவலக பணிகளை செய்து கொண்டிருந்தார் என்று புலன்விசாரணை அதிகாரி கண்டறிந்தார். விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், சம்பவம் நடந்த தேதி மற்றும் நேரத்தில், சுபாஷ் சந்திர சுக்லா சம்பவ இடத்தில் இல்லை என்ற காண்முடிவை விசாரணை அதிகாரி பதிவு செய்தார். அதன்படி, 19.09.2014 அன்று முதல் குற்ற அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டபோது சுபாஷ் சந்திர சுக்லாவின் பெயர் கைவிடப்பட்டது. 15.10.2014 அன்று ராகுல் சுக்லா மீது கூடுதல் முதல் குற்ற அறிக்கைத் செய்யப்பட்டது. மு.த.அ.வில் இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலும், புலன்விசாரணையின் போது, இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர் சம்பவம் நடந்த இடத்தில் இல்லை என்பது கண்டறியப்பட்டது. புலன்விசாரணை அதிகாரியின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், அவர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. மேல்முறையீட்டாளர் - புகார்தாரர் அங்கே அப்போது எந்த எதிர்ப்பு மனுவையும் தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விசாரணையில், எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்று கண்டறியப்பட்டபோது, எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஐ குற்றம் சாட்டப்பட்டவராக அழைக்க கீழமை நீதிமன்றங்கள் சரியாக மறுத்துள்ளன.

13. விசாரணை நீதிமன்றம் சுட்டிக்காட்டியபடி, அ.த.சா.1, 22.10.2016 முதல் 02.08.2017 வரை பல்வேறு தேதிகளில், ஒன்பது கேட்புகை தினங்களில் விசாரிக்கப்பட்டார். அ.த.சா. 1, 22.10.2016 இல் நடந்த முதல் விசாரணையில், சுபாஷ் சந்திர

சுக்லா இருந்ததைப் பற்றி கூறி, இறந்த சங்கம் லால் மிஸ்ராவை அவர் கைத்துப்பாக்கியின் அடிப்பக்கத்தால் அடித்தார் என்று குற்ற செயலை அவர்மீது சுமத்தினாலும், அ.த.சா. -1 அவருடைய குறுக்கு விசாரணையில் சுபாஷ் சந்திர சுக்லா அந்த நேரத்தில் பணியில் இருந்தார் என்று குறிப்பிட்டார். அ.த.சா. 1 இன் அறிக்கையின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு:

> "....சுபாஷ் சந்திர சுக்லா அந்த வீட்டில் வசிக்கவில்லை. அவர் பணி/வேலையில் இருக்கிறார். அதே சமயத்தில் அவர் மிர்ஜாபூர் மாவட்டம் ஜிக்னா காவல் நிலையத்தில் அவர் பாலம் அமைத்துக் கொண்டிருந்தார், இதன் காரணமாக, அவர் அங்கு பணியில் இருந்தார்...."

விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் குறிப்பிட்டவாறு, அ.த.சா.1 அவருடைய விசாரணையின் போது சுபாஷ் சந்திர சுக்லாவின் இருப்பு குறித்து முரணான வாக்குமூலங்களை அளித்துள்ளார்.

14. கண்ணுற்ற சாட்சி என்றுக் கூறப்பட்ட ஆனந்த் குமார் மிஸ்ராவிடம் (அ.த.சா .2) விசாரணை நடத்தப்பட்டது. (அ.த.சா.2) உதவி ஆசியராக (சிக்ஷா மித்ரா) பணி செய்துக்கொண்டிருக்கிறார். அவரது பணி நேரம் காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை ஆகும். சம்பவம் நடந்த தேதியன்று தான் விடுப்பில் இருந்ததாக அ.த.சா.2 கூறினாலும், சம்பவம் நடந்த நேரத்தில் அவர் அங்கு இருந்ததை விசாரணை நீதிமன்றம் சந்தேகிக்கிறது. அ.த.சா.2 ஆசிரியராக பணிப்புரிகிறார், அ.த.சா.2 எதிர் வழக்கில் உடன் குற்றவாளியாக இருக்கிறார் என்ற பொருண்மைகளை கருதும் போது இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் இருந்ததாக சான்றுரைப்பதைக் குறித்து விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் சந்தேகத்தை வெளிப்படுத்துகின்றன. சம்பவத்தில்

இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் உடந்தையாக இருந்ததை பதிவில் உள்ள சான்றுகள் முகாந்திரமாகக் காண்பிக்கவில்லை, மேலும் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரைக் குற்றம் சாட்டப்பட்டவராக அழைக்க உயர் நீதிமன்றம் மறுத்தது நியாயமானது.

15. வழக்கில் எதிரியாக இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அழைப்பாணையிட பதிவில் உள்ள சான்றுகள் போதுமானதாக இல்லை என உயர்நீதிமன்றமும் விசாரணை நீதிமன்றமும் ஒருசேர முடிவுரைத்துள்ளன. நாம் தலையிடுவதற்கு கணிசமான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை, மேலும் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படத்தக்கதாக உள்ளது.

16. முடிவாக மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் எஸ்.டி. எண் 26/2015 என்ற வழக்கின் விசாரணையை சட்டப்படி தொடரலாம். இந்த மேல்முறையீட்டில் இந்நீதிமன்றத்தின் காண்முடிவுகளும், சீராய்வில் உயர்நீதிமன்றத்தின் காண்முடிவுகளும் முறையே மேல்முறையீட்டின் மற்றும் சீராய்வின் நோக்கங்களை பரிசீலிப்பதற்காக மட்டுமே கருதப்பட வேண்டும், அதையே முதன்மை வழக்கின் தகுதிப்பாடுகளாக கருத்தை வெளிப்படுத்துவதாக பொருள்கொள்ளக்கூடாது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."